(ஆ) இப் பகுதிகளில் சீரான மின் அழுத்தம் பராமரிக்கப் படுவதற்காக புதிய இரு மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன. இப்பகுதி களில் மின் தடைகளை தவிர்ப்பதற்காக பனகுடி கேப்-(லெவஞ்சிபுரம்) இருப்புப்பாதை பகுதியில் மேலும் ஒரு புதை மின்வடம் (Underground Cable) போடப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இத்தனை முயற்சிகளை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இங்கே கேள்வி யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த காவல்கிணறு பகுதியிலே தான் மகேந்திரகிரி இருக்கிறது. ராக்கெட் ஆராய்ச்சி நிலை யமும் அங்கேதான் இருக்கிறது. எனவே, வருங்காலத்திலேயும் அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிற காரணத்தினாலே பக்கத் தில் வர இருக்கின்ற கூடங்குளத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு முயற்சிக்கும்.

கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டு பகுதிகளை விரிவு படுத்துதல்

*2087—திரு. ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டுப் பகுதி தற் போது விரிவாக்கப்பட்டு அதிகமான நிலப்பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலத்திற்கு விரிவாக் கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்பவானி திட்டத்தில் புதியதாக 20,419 ஏக்கர் நிலங்களை சேர்ப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள் ளது.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன ஆயக்கட்டு 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் என்றாலும், கடந்த 35 ஆண்டுகளில் அதிலே

1990 மார்ச் 24]

வீட்டு மனைகளாகவும், கால்நடைத் தொழுவங்களாகவும் மாறியிருக்கிற நிலங்களை ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து அரசு நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது குறித்து புலத் தணிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடைய ஒரு அறிக்கையை 30-6-1990-க்குள் தர வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்போது கீழ்பவானி பாசனப் பகுதியில் உரிய ஆயக்கட்டுப் பகுதி எவ்வளவு ஏக்கர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தற்போது பாசனம் பெறுவது, ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 909 ஏக்கர்.

தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள்

*5241—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள் எந்தெந்த பகுதிகளில் வாழ்கிறார்கள்?

(ஆ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் ஆதிவாசிகள் வசிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) அவர்களுக்கு அரசு சலுகைகளும் முன்னேற்றத் திட்டங்களும் ஏன் செயல்படுத்தப்படவில்லை.?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி, தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி (பழங்குடி) மக்கள் 6,012 பேர்கள் சீர்காழி, மயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், கும்பகோணம், நன்னிலம், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய வட்டங்களில் வாழ்கின்றனர்.

(ஆ) மற்றும் (இ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் வசிக்கும் 201 மக்கள் ''சிந்தி வலையர்'' எனப்படும் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இனம் பழங்குடியினர் பட்டியலில் இடம் பெறவில்லை.